Tamil Nadu Agricultural University
Coimbatore – 641 003

| | |
|---|---|
| Dr. E. Somasundaram, Ph.D., | Phone: 0422 - 6611302 |
| Public Relations Officer & | Fax: 0422 – 2431821 |
| Professor (Agronomy) | E-mail: pro@tnau.ac.in |


To
The Editor,

Date: 8-1-2013

Sir,

I request that the following matter may kindly be published in your esteemed daily:

## Price forecast for Thaipattam crops

Thai Pattam (Jan-Feb) is one of the major seasons for sowing of many agricultural crops in Tamil Nadu. The crops are raised under irrigated conditions in this season. The major commercial crops sown during this season are maize, groundnut and small onion and farmers are eager to know what would be the prices of these commodities during their harvest. This information is essential to them to take a right sowing decision. To help them in doing so Domestic and Export Market Intelligence Cell functioning in Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University is now releasing its price forecast for these crops.

### Maize

India produced 21.6 million tonnes of maize from an area of 8.67 million hectares in 2011-12. Karnataka, Andhra Pradesh, Maharashtra, Tamil Nadu, Rajasthan and Uttar Pradesh together contribute 60 per cent of area and 70 per cent of maize production in India. Karnataka produced 4.1 million tonnes of maize from 1.3 million hectares in the year 2011-12. Tamil Nadu attained fourth position in Indian maize production as against seventh a year before, because of the highest productivity of 5176.4 kg/ha and larger cultivation. The Agriculture Department, Government of India reported that 14.89 million tonnes was produced in *kharif*, 2012, which was 8.19 per cent lesser than the previous year. Trade sources reported that this year, the late monsoon has hindered the production of maize in almost all the major growing States.

Even though Maize is cultivated almost all round the year, farmers with irrigation facilities only could grow maize during Thai Pattam. The produce will come to harvest by April & May 2013. Currently in Tamil Nadu, the price is ruling around Rs.1350 to Rs.1400 per quintal. NAIP-Domestic and Export Market Intelligence Cell functioning in Tamil Nadu Agricultural University analyzed the sixteen years prices that prevailed in Udumalpet market and predicted that the price will be ruling above Rs.1450 per quintal during April to June, 2013, i.e., during harvest of Thai sown crop. The continuous demand for maize in poultry industry and good export demand will help the prices to rule around higher side. Based on this, farmers are recommended to go for maize sowing in Thai pattam and get higher prices. They are advised to sow varieties/ hybrids with bold grains to fetch better

prices. In 100 gram of maize grain if the number of grains is less than 350, higher prices could be received by farmers.

**Groundnut**

India is one of the largest producers of oilseeds in the world. It ranks first in area and seventh in production at global level in oilseeds. According to the Solvent Extractors' Association (SEA) of India, the total vegetable oil imports in October 2012 was 1,036,107 tonnes, up from 993,912 tonnes in the previous month. The import forecast includes 7.88 million tonnes of palm oil, 1.20 million tonnes of soybean oil and 1 million tonne of sunflower oil during 2012-13 oil year. India imports vegetable oils from Indonesia, Malaysia and Argentina, etc.

In India, groundnut production in Kharif 2011-12 was 41.75 lakh tonnes and in 2012-13, the kharif production is estimated at 26.20 lakh tonnes as per estimates of Solvent Extractors Association of India. The major States growing groundnut are Gujarat, Andhra Pradesh, Rajasthan, Karnataka, Tamil Nadu and Maharashtra. Gujarat occupies the first position in production (42.51 %), followed by Andhra Pradesh (13.17%), Rajasthan (13.17%), Karnataka (8.38 %), Tamil Nadu (8.38 %) and Maharashtra (4.31 %). In Tamil Nadu, groundnut is cultivated in around 4.89 lakh hectares and about 10.26 lakh tonnes of groundnut is produced with an average yield of 1775 Kg/ha. Major groundnut producing districts are Tiruvannamalai, Villupuram, Vellore, Kancheepuram, Namakkal and Erode.

To facilitate the farmers in taking a better decision on sowing groundnut in Thaipattam, the NAIP- Domestic and Export Market Intelligence Cell (DEMIC) analyzed the past 15 year prices prevailed in Sevur regulated market. The econometric analysis of groundnut prices revealed that farmers could get a price of Rs.48 to 50/ kg of dried groundnut pods during April, May 2013. In Erode district, groundnut is mostly sold for use in confectionary and hence the prices are always higher than in other districts. Based on the above price, farmers are recommended to take their sowing decision.

**Small onion**

Small onion is cultivated all through the year as it is one of the profitable vegetables. According to trade sources, this year the area under small onion has decreased because of less rain fall. According to National Horticultural Research and Development Foundation (NHRDF), area and production of onion in Tamil Nadu were 22,270 hectares (ha) and 3,33,870 tonnes, respectively during 2011-12. Perambalur district in Tamil Nadu occupies 24 per cent of the area under onion. The other districts cultivating onion are Tiruchirapalli, Tiruppur, Dindigul, Tirunelveli, Namakkal, Erode, Thoothukudi, Virudhunagar, and Coimbatore. Among these Perambalur, Tiruchirapalli, Tiruppur and Dindigul contribute more than 60 per cent of the onion area and production in the State.

In October, November months the arrivals were largely from stocks. Trade sources informed that due to less arrival the price has increased to Rs.40 and above in November 2012 and exports also decreased. At present the market is receiving the harvested produce from Thoothukudi, Tiruchirapalli, Dindigul and Coimbatore districts. Arrivals from Karnataka would be from February to March end. The current farm price of small onion is around Rs.30 per kg.

The farmers are enquiring about sowing of small onion in Thai Pattam. Hence, to facilitate their sowing decisions, NAIP- Domestic and Export Market Intelligence Cell (DEMIC) analyzed the past 15 year prices prevailed in Dindigul market and also conducted market surveys which revealed that the farm price for small onion will be around Rs. 22-25 per kg in April to June, 2013 i.e., during harvest. Hence it is recommended that farmers may go for small onion cultivation in Thai Pattam based on the above price.

**For further details contact:**


Domestic and Export Market Intelligence Cell,
Centre for Agricultural and Rural Development Studies,
Tamil Nadu Agricultural University,
Coimbatore-641 003.
Phone: 0422-2431405


**For Technical Details please contact:**


1. Dr.G. Nallathambi
   Professor (Maize Breeding)
   Centre for Plant Breeding and Genetics
   Tamil Nadu Agricultural University
   Coimbatore-641 003,
   Phone: 0422-2450507
   Cell no: 9486913279
2. Dr. K. Ganesamoorthy,
   Professor and Head,
   Department of Oil Seeds,
   Tamil Nadu Agricultural University,
   Coimbatore-641 003.
   Phone No: - 0422-2450812
   Mobile No: - 9360339737
3. Dr. L.Pugalenthi,
   Professor & Head,
   Department of Vegetable crops,
   Horticulture College and Research Institute,
   Tamil Nadu Agricultural University,
   Coimbatore-641 003.
   Phone No: - 0422-6611283
   Mobile No: - 9443498469


Public Relations Officer

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 8-1-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## <u>தைப்பட்டப் பயிர்களுக்கான விலை முன்னறிவிப்பு</u>

தமிழ்நாட்டில் தைப்பட்டம் (ஜனவரி-பிப்ரவரி) வேளாண் விதைப்புக்கு உகந்த காலமாகும். இப்பட்டத்தில் நீர்ப்பாசனம் மூலம் வேளாண் விளை பொருட்கள் உற்பத்தி செய்யப் படுகின்றன. மக்காச்சோளம், நிலக்கடலை மற்றும் சின்ன வெங்காயம் போன்ற முக்கியப் பயிர்கள் இப்பட்டத்தில் விதைக்கப்படுகின்றன. இப்பருவத்தில் பயிரிட்டால், அறுவடையின் போது என்ன விலை கிடைக்கும் என்பதை தெரிந்து கொள்ள விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். விவசாயிகள் விதைப்பு பற்றிய சரியான முடிவுகளை எடுப்பதற்கு மேற்கண்ட தகவல்கள் தேவையாக உள்ளன. அவர்களுக்கு உதவும் வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது தைப் பட்டப் பயிர்களுக்கு விலை முன்னறிவிப்பை வெளியிட்டுள்ளது.

**மக்காச்சோளம்**

இந்தியா 2011-12 ல் 21.6 மில்லியன் டன் மக்காச்சோளத்தை 8.67 மில்லியன் எக்டரில் உற்பத்தி செய்தது. கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, இராஜஸ்தான் மற்றும் உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள், மக்காச்சோளப் பரப்பில் 60 சதவீதமும் மற்றும் உற்பத்தியில் 70 சதவீதமும் பங்களிக்கின்றன. 2011-12 ல் கர்நாடக மாநிலம் 4.1 மில்லியன் டன் மக்காச்சோளத்தை 1.3 மில்லியன் எக்டரில் உற்பத்தி செய்தது. மக்காச்சோள உற்பத்தியில் இந்தியாவில் கடந்த ஆண்டு ஏழாமிடத்தில் இருந்த தமிழகம் அதிக உற்பத்தித்திறன் (5176.4 கிலோ / எக்டர்) மற்றும் அதிகப் பரப்பு காரணமாக இந்த ஆண்டு நான்காம் இடத்தில் உள்ளது. இந்திய அரசின் வேளாண் துறையின் கணக்கீட்டின் படி 2012ம் ஆண்டு கரீப் பருவத்தில் 14.89 மில்லியன் டன் மக்காச்சோளம் உற்பத்தி ஆனது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 8.19 சதவீதம் குறைவாகும். வர்த்தக மூலங்களின்படி, இந்த ஆண்டு கரீப் பருவத்தில் காலம் தவறிய பருவமழையினால் மக்காச்சோளம் பயிரிடும் அனைத்து மாநிலங்களிலும் விதைப்பு குறைந்துள்ளது.

மக்காச்சோளம் ஆண்டு முழுவதும் பயிரிடப்பட்டாலும், பாசன வசதியுள்ள விவசாயிகள் மட்டும் தைப் பட்டத்தில் மக்காச்சோளம் பயிரிடுவர். இப்பருவத்தில் விதைக்கும் மக்காச்சோளம் ஏப்ரல் மற்றும் மே 2013இல் அறுவடைக்கு வரும். தமிழ்நாட்டில் மக்காச்சோளம் தற்போது குவிண்டால் ரூ.1350லிருந்து ரூ.1400 வரை விற்கப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் கடந்த 16 ஆண்டுகளாக உடுமலைப்பேட்டை சந்தையில் நிலவிய மக்காச்சோள விலைகளை

ஆய்வு செய்து முடிவுகளை வெளியிட்டுள்ளது. ஆய்வு முடிவுகளின் படி தைப்பட்ட பயிர் அறுவடைக்கு வரும் 2013 ஏப்ரல் முதல் ஜுன் வரை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1450க்கு மேல் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன. கோழிப்பண்ணை நிறுவனங்களின் மக்காச்சோளத் தேவை மற்றும் ஏற்றுமதித் தேவை உயர்வு ஆகிய காரணங்களினால் விலை ஏறுமுகத்தில் இருக்கும். ஆகவே விவசாயிகள் வரும் தைப்பட்டத்தில் மக்காச்சோளம் விதைக்க சிபாரிசு செய்யப்படுகின்றனர். மேலும் நல்ல விலை கிடைக்க பெரிய மணிகள் கிடைக்கும் இரகங்களை தேர்வு செய்ய அறிவுறுத்தப்படுகின்றனர். 100 கிராம் மக்காச்சோளத்தில் 350க்கும் குறைவான மணிகள் இருப்பின் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும்.

### நிலக் கடலை

உலகளவில் எண்ணெய் வித்துக்களில் மிகப்பெரிய உற்பத்தியாளர்களில் இந்தியாவும் ஒன்றாகும். எண்ணெய் வித்துக்களில் பரப்பளவில் இந்தியா முதல் இடத்திலும் உற்பத்தியில் ஏழாம் இடத்திலும் உள்ளது. எண்ணெய் பிழிவோர் சங்கத்தின் படி, தாவர எண்ணெய் இறக்குமதி அக்டோபர் 2012ல் 1,036,107 டன்னாகவும், அதற்கு முந்தைய மாதத்தில் 993,912 டன்னாகவும் இருந்தது. 2012-13ல் தாவர எண்ணெய் இறக்குமதி முறையே பாமாயில் 7.88 மில்லியன் டன்னாகவும், சோயா எண்ணெய் 1.20 மில்லியன் டன்னாகவும் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் 1 மில்லியன் டன்னாகவும் இருக்கும் என கணிக்கப் பட்டுள்ளது. இந்தோனேசியா, மலேசியா மற்றும் அர்ஜென்டைனா ஆகிய நாடுகளிலிருந்து தாவர எண்ணெயை இந்தியா இறக்குமதி செய்கிறது.

இந்திய எண்ணெய் பிழிவோர் சங்கத்தின் ஆய்வு அறிக்கையின் படி 2011-12ம் ஆண்டு கரீப் பருவத்தில் நிலக்கடலை உற்பத்தி 41.75 இலட்சம் டன்களாகும். இது 2012-13ல் சுமார் 26.20 இலட்சம் டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குஜராத், ஆந்திரப்பிரதேசம், இராஜஸ்தான், கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் நிலக்கடலை அதிகமாக பயிரிடப்படுகிறது. நிலக்கடலை உற்பத்தியில் குஜராத் (42.51%) முதல் இடத்திலும் அதனைத் தொடர்ந்து ஆந்திரப்பிரதேசம் (13.17%), இராஜஸ்தான் (13.17%), கர்நாடகா, (8.38%), தமிழ்நாடு (8.38%) மற்றும் மகாராஷ்டிரா (4.31%) ஆகிய மாநிலங்களும் உள்ளன. தமிழ்நாட்டில் நிலக்கடலை பயிரிடும் பரப்பு 4.89 இலட்சம் எக்டராகவும், மொத்த உற்பத்தி 10.26 இலட்சம் டன்களாகவும், உற்பத்தித்திறன் எக்டருக்கு 1775 கிலோ என்ற அளவிலும் உள்ளன. திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம், நாமக்கல் மற்றும் ஈரோடு ஆகியன நிலக்கடலை உற்பத்தியில் முக்கிய மாவட்டங்களாகும்.

விவசாயிகள் விதைப்பு பற்றிய சரியான முடிவுகளை எடுப்பதற்கு உதவும் வகையில் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது 20 வருட காலமாக சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நிலவிய நிலக்கடலை விலைகளை ஆய்வு செய்தது. ஆய்வு முடிவுகளின் படி 2013 ஏப்ரல், மே மாதங்களில் சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நிலக்கடலைக்கு (கடலைக் காய்) கிலோ ஒன்றுக்கு ரூ.48-50 வரையிலும் விலை கிடைக்க வாய்ப்புள்ளது. ஈரோடு மாவட்டத்தில் விற்பனையாகும் நிலக்கடலை பொதுவாக மிட்டாய்க்குப் பயன்படுத்தப்படுவதால் மற்ற மாவட்டங்களை விட சேவூரில் அதிக விலை கிடைக்கிறது. மேற்கண்ட விலை முன்னறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு விவசாயிகள் தைப்பட்டத்தில் நிலக்கடலை விதைப்பு முடிவுகளை எடுக்கும் படி சிபாரிசு செய்யப் படுகின்றனர்.

### சின்ன வெங்காயம்

சின்ன வெங்காயம் இலாபகரமான பயிராக இருப்பதால் தற்போது இது ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக பயிர் செய்யப்பட்டு வருகிறது. வர்த்தக மூலங்களின் படி, இந்த வருடம் சின்ன வெங்காயத்தின் பரப்பு, குறைந்த மழையளவு காரணமாக குறைந்துவிட்டது. மத்திய அரசின் தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையத்தின் கணக்கீட்டின் படி, தமிழ்நாட்டின் பரப்பு மற்றும் உற்பத்தி 2011-2012ல் முறையே 22,270 எக்டராகவும் மற்றும் 3,33,870 டன்களாகவும் உள்ளன. தமிழ்நாட்டில் வெங்காய சாகுபடிப் பரப்பில் பெரம்பலூர் மாவட்டம் 24 சதவீதம் பங்குவகிக்கிறது. திருச்சி, திருப்பூர், திண்டுக்கல், திருநெல்வேலி, நாமக்கல், ஈரோடு,

தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் கோயம்புத்தூர் ஆகியன வெங்காயம் உற்பத்தி செய்யும் மற்ற முக்கிய மாவட்டங்களாகும். இவற்றில் பெரம்பலூர், திருச்சி, திருப்பூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்கள் சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தியில் 60 சதவீதத்திற்கும் மேல் பங்களிக்கின்றன.

அக்டோபர், நவம்பர் மாதத்தில் சின்ன வெங்காயம் இருப்பில் இருந்து தான் வந்து கொண்டிருந்தது. வர்த்தக மூலங்களின் படி குறைவான வரத்தினால் நவம்பர் 2012ல் விலை ரூ.40க்கு மேல் உயர்ந்தது, மற்றும் ஏற்றுமதியும் குறைந்தது. தற்போது தூத்துக்குடி, திருச்சி, திண்டுக்கல் மற்றும் கோவை மாவட்டங்களிலிருந்து சந்தைக்கு வரத்து வந்து கொண்டிருக்கின்றன. கர்நாடகாவிலிருந்து பிப்ரவரி முதல் மார்ச் இறுதிவரை வரத்து வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது பண்ணை விலை கிலோ ஒன்றுக்கு சராசரியாக ரூ.30 ஆக உள்ளது.

விவசாயிகள் விதைப்பு பற்றிய முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 15 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலையை உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் ஆராய்ந்தது. ஆய்வு முடிவுகளின்படி தைப்பட்டத்தில் நடவு செய்தால் சின்ன வெங்காயத்திற்கு அறுவடை சமயத்தில் அதாவது ஏப்ரல் முதல் ஜுன் மாதம் வரை கிலோ ஒன்றுக்கு ரூ.22 முதல் 25 வரை விலை கிடைக்க அதிக வாய்ப்புகள் உள்ளன.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் ,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003
தொலைபேசி: 0422-2431405

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:</u>

1. முனைவர். ஜி. நல்லதம்பி
பேராசிரியர்
பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி எண்: 0422-2450507
அலைபேசி : 94869 13279

2. முனைவர். கு.கணேசமூர்த்தி,
பேராசிரியர் மற்றும் தலைவர்,
எண்ணெய் வித்துக்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்-641 003
தொலைபேசி எண் - 0422-2450812
அலைபேசி எண் - 93603 39737

3. முனைவர், எல். புகழேந்தி
பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்-641 003
தொலைபேசி எண் -0422-6611283
அலைபேசி எண் - 94434 98469

மக்கள் தொடர்பு அலுவலர்